ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1960/39 - 2016 මාර්තු මස 31 වැනි බ්‍රහස්පතින්දා - 2016.03.31
*1960/39 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டம்**

*212 ஆம் பிரிவின் கீழான ஒழுங்குவிதிகள்*

*2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 104 ஆம் பிரிவின் (3), (3அ) மற்றும் (4) ஆம் உப பிரிவுகளுடனும் 104 அ ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 212 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் விடுக்கப்படும் ஒழுங்குவிதி.*

ரவி கருணாநாயக்க,
*நிதி அமைச்சர்.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2016, மாச்சு 31.*

**ஒழுங்குவிதிகள்**

*2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 104 ஆம் பிரிவின் உட்பிரிவுகள் (3) மற்றும் (4) உடன் சேர்த்து வாசிக்கப்படும், 212 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2013, ஓகத்து 12 ஆந் திகதிய 1823/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பகுதி I இல் பிரசுரிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள், 2015, ஏப்பிறல் 1 ஆந் திகதியிலிருந்து பயனுறுதியாகும் வகையில் பின்வருமாறு இத்தால் திருத்தியமைக்கப்படுகின்றது.*

1. 9 ஆவது ஒழுங்குவிதியினை நீக்குவதன் மூலம், அதற்குப் பதிலாக பின்வரும் ஒழுங்குவிதியானது பதிலீடு செய்யப்படுகின்றது.

"9. **பணிப்பாளர் பிரதான அலுவலர் முன்னுரிமைப் பங்காளரின் வெளிப்படுத்தல்கள் :**

நிதிக்கூற்றில் பதிவு செய்யப்பட்டவாறு ஒவ்வொரு வரி மதிப்பீட்டாண்டுக்கும் ரூபா 100 மில்லியன் அல்லது அதனை விஞ்சுகின்ற மொத்தப் பெறுமதியினைக் கொண்டிருக்கும் இணைந்த வியாபாரங்களுடன் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுகின்ற அல்லது கொடுக்கல் வாங்கல் வகையீடுகளினைக் கொண்டிருக்கின்ற ஒவ்வொரு இணைந்த வியாபாரமும், வருமான வரி விபரத்திரட்டுடன் படிவங்களையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

மேற்குறித்த படிவங்கள், ஒப்படைப்பு விலையிடல் தொடர்பான பின்வரும் வெளிப்படுத்தல்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 107 (2) (அ) பிரிவின் கீழ் விதித்துரைக்கப்பட்டவாறான பொருத்தமான வடிவத்தில் இணைந்த வியாபாரங்களுடன் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் அல்லது கொடுக்கல் வாங்கல் ; வகையறாக்களின் பதிவு, மற்றும் ஏனைய தகவல்கள் ;

(ஆ) ஒப்படைப்பு விலையிடலினைத் தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் உபாயங்கள் மற்றும் கொள்கைகளை குறிப்பீடு செய்கின்ற ஒப்படைப்பு விலையிடல் கொள்கைக் கூற்று ;

(இ) இதனுடன் தொடர்பான முகாமைத்துவ ஆபத்துக் காரணிகளும், ஏதுமிருப்பின் ;

(ஈ) ஐந்தொகை திகதியிலுள்ளவாறு இணைந்த வியாபாரங்கள் தொடர்பான நிலுவைத் தொகை அல்லது உரிய விகிதம் மற்றும் ஐந்தொகைத் திகதியன்று இணைந்த வியாபாரங்களிலிருந்து கிடைக்கப்பெற வேண்டிய ஐயக் கடன் ஒதுக்கம் ;

(உ) ஏதேனும் சட்டவிதியின் கீழ் அல்லது ஏதேனும் கணக்கீட்டு நியமத்தின் கீழ் வெளிப்படுத்துவதற்குத் தேவைப்படுகின்ற அல்லது நிதிக்கூற்றுக்களை விளங்கிக் கொள்வதற்கு அவசியமான இணைந்த வியாபாரங்களின் கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புடைய வேறு ஏதேனும் காத்திரமான தகவல்.

எவ்வாறாயினும் ஏதேனும் இணைந்த வியாபாரத்துடன் கொடுக்கல் வாங்கலினை மேற்கொள்கின்ற மேற்குறித்த இணைந்த வியாபாரமானது இலங்கை ரூபா பத்து மில்லியன் அல்லது அதற்கு குறைந்த மொத்தப் பெறுமதியல் கொடுக்கல் வாங்கலினை மேற்கொள்ளுமிடத்து மேற்குறித்த வெளிபடுத்தல் தேவைப்படுத்தலானது பந்தி (அ) இற்கு மட்டுப்படுத்தப்படலாம்.”

2. 10 ஆவது ஒழுங்குவிதியினை நீக்குவதன் மூலம், அதற்குப் பதிலாக பின்வரும் ஒழுங்குவிதியானது பதிலீடு செய்யப்படுகின்றது.

**“10. ஒப்படைப்பு விலையிடல் ஒழுங்குவிதிகள் மீதான பணிப்பாளர்/பிரதான அலுவலர்/முன்னுரிமைப் பங்காளரின் சான்றிதழ்**

(அ) நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்யப்பட்டவாறு ஒவ்வொரு வரி மதிப்பீட்டாண்டுக்கும் ரூபா 100 மில்லின் அல்லது அதனை விஞ்சுகின்ற மொத்தப் பெறுமதியினைக் கொண்டிருக்கின்ற இணைந்த வியாபாரம் / வியாபாரங்களுடன் கொடுக்கல் வாங்கல்களினை மேற்கொள்கின்ற அல்லது கொடுக்கல் வாங்கலில் வகையீடுகளினைக் கொண்டுள்ள ஒவ்வொரு இணைந்த வியாபாரத்தினதும் பணிப்பாளர்/பிரதான அலுவலர்/முன்னுரிமைப் பங்காளர் வருமான வியாபாரங்களுடன் உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் நாயகத்திற்கு ஒப்படைப்பு விலையிடல் தொடர்பான சான்றிதழை சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுகின்றனர்.

(ஆ) அதே சான்றிதழானது, பங்குடைமைப் பங்காளர்களுக்கும் கம்பனியாயின் அதன் ஆண்டறிக்கையில் உட்படுத்தப்பட வேண்டும் அல்லது கம்பனி பங்குதாரருக்கும் பிரதிப்படப்படல் வேண்டும்.

(இ) பணிப்பாளரின் பிரதான அலுவலரின் /முதன்மைப் பங்காளரின் சான்றிதழானது பின்வரும் வடிவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**ஒப்படைப்பு விலையிடல் மீதான பணிப்பாளர்/பிரதான அலுவலர்/முன்னுரிமைப் பங்காளரின் சான்றிதழ்**

இது 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட ஒப்படைப்பு விலையிடலில் ஒழுங்கு விதிகளுடன் இணங்கியொழுகுகிறது என்பதனைச் சான்றுபடுத்தப்படுகின்றது. இத்தகைய ஒழுங்குவிதிகள் தொடர்பான தகவல் குறித்த சட்டத்தின் 107 (2) (அ) ஆம் பிரிவின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட சான்றிதழானது கணக்காளரின் அங்கீகாரத்தின் கீழ் வழங்கப்படுகின்றது. நான்/நாம் ............................................ இலிருந்து ................... வரையான காலப்பகுதியின் போது தொடர்புடைய இணைந்த வியாபாரங்களுடன் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்ட கம்பனி/ அல்லது பங்குடமையின் நலனில் எவ்விதத்திலும் பாதிப்பு ஏற்படாதவாறு கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலையில் பதிவு செய்யப்பட்டிருக்குமென்பதுடன் இக்கொடுக்கல் வாங்கல்கள் இலாபத்தினை இடம்பெயர்க்கும் நோக்கங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லையெனவும் நம்புகின்றேன்/நம்புகின்றோம்.

அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களின் பதிவேடுகளும் தகவல்களும் ஒப்படைப்பு விலையிடல் கணக்காய்வினை மேற்கொண்டு வருகின்ற அங்கீகரிக்கப்பட்ட கணக்காளரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அங்கீகரிக்கப்பட்ட கணக்காளரினால் மேற்கொள்ளப்பட்ட சான்றுப்படுத்தல் (பாதகமான குறிப்புக்கள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை) (பாதகமான குறிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன)

......................................
இடம் :

.....................
பணிப்பாளர் சபை/பிரதான அலுவலர்/
முன்னுரிமைப் பங்காளருக்காக.

* ஏற்புடையதல்லாதவற்றை நீக்குக.”

**குறிப்பு** : அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் இலங்கை ரூபாய்களில் பத்து மில்லியன் அல்லது அதற்கு குறைந்த மொத்தப் பெறுமதியினைக் கொண்டிருப்பின் ஏதேனும் இணைந்த வியாபாரத்துடன் கொடுக்கல் வாங்களினை மேற்கொள்கின்ற கம்பனி பங்குடைமையொன்றினை பொறுத்தவரையில், அங்கீகரிக்கப்பட்ட கணக்காளருக்கான கொடுக்கல் வாங்ககள் தொடர்பான பதிவேடு மற்றும் தகவலின் சமர்த்தலானது தேவைப்படுத்தப்படாமலும் போகலம்.

5- 29

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.